# அல்குர்ஆன் வர்ணிக்கும் நம்பிக்கையாளர்கள்

ஜுமுஆ குத்பா தலைப்பு : அல்குர்ஆன் வர்ணிக்கும் நம்பிக்கையாளர்கள்

வரிசை : 760

இடம் : மஸ்ஜிதுல் ஹுதா, தாருல் ஹுதா, மண்ணடி, சென்னை – 1

கதீப் : உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

நாள் : 06-01-2023 | 13-06-1444

**بسم الله الرحمن الرحيم**

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ،

وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ

بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

கண்ணியத்திற்குரிய அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹு தஆலாவை போற்றி புகழ்ந்தவனாக, அல்லாஹ்வுடைய தூதர் மீதும் அந்த தூதரின் குடும்பத்தார் தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் நிலவட்டும் என்று வேண்டியவனாக!

உங்களுக்கும் எனக்கும் அல்லாஹ்விடத்தில் மன்னிப்பையும், அருளையும், நம்பிக்கையாளர்களுடைய நற்குணங்களையும், நற்பண்புகளையும் வேண்டியவனாக, உங்களுக்கும் எனக்கும் அல்லாஹ்வின் தக்வாவை நினைவூட்டியவனாக இந்த குத்பாவை ஆரம்பம் செய்கிறேன்.

அல்லாஹ் சுப்ஹானஹு தஆலா நம்மை பொருந்தி கொள்வானாக! நம்முடைய கெட்ட குணங்களில் இருந்து நம்மை பாதுகாத்து, நற்குணங்களைக் கொண்டு அல்லாஹு தஆலா நம்மை அலங்கரிப்பானாக!

மூஃமின்களுக்கு அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய ரசூலும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்னென்ன நற்குணங்களை நற்பண்புகளை கூறினார்களோ அந்த நற்குணங்களைக் கொண்டு நாம் நம்மை அலங்கரித்துக் கொள்ள அல்லாஹு தஆலா நமக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

அல்குர்ஆனை சிந்திப்போம் என்ற அந்த தலைப்பில் நம்பிக்கையாளர்கள் என்று அல்லாஹ்விற்கு விருப்பமான அல்லாஹ்விற்கு பிரியமான அல்லாஹ்விற்கு உகப்பான நல்லடியார்கள் என்று யாரை அல்லாஹுதஆலா புகழ்கிறான்? என்ற அடிப்படையிலே சூரத்துல் தவ்பாவிலே 112 வது வசனத்திலே சில நல்லோரை அல்லாஹு தஆலா அவர்களுடைய உயர்ந்த பண்புகளைக் கொண்டு புகழ்கிறான்.

அதுபோன்று சூரத்துல் முஃமினினுடைய ஆரம்ப வசனங்களிலும் அவர்களை அல்லாஹு தஆலா அவர்களின் உயர்ந்த நற்குணங்களை கொண்டு என்னென்ன நற்குணங்களை எந்த அடையாளங்களை முஃமின்களுக்கு அல்லாஹு தஆலா கூறுகிறான் என்பதைப் பற்றி இந்த ஜும்ஆவில் பார்ப்போம்.

التَّائِبُونَ الْعَابِدُونَ الْحَامِدُونَ السَّائِحُونَ الرَّاكِعُونَ السَّاجِدُونَ الْآمِرُونَ بِالْمَعْرُوفِ وَالنَّاهُونَ عَنِ الْمُنْكَرِ وَالْحَافِظُونَ لِحُدُودِ اللَّهِ وَبَشِّرِ الْمُؤْمِنِينَ

(சொர்க்க பாக்கியம் பெறுகின்ற அவர்கள் பாவத்திலிருந்து) திருந்தியவர்கள்; வணக்கசாலிகள்; அல்லாஹ்வை புகழ்பவர்கள்; நோன்பு நோற்பவர்கள்; (தொழுகையில் பணிவாக அல்லாஹ்விற்கு முன்) குனிபவர்கள், சிரம் பணிபவர்கள்; நன்மையை ஏவக் கூடியவர்கள்; இன்னும், பாவத்தை விட்டுத் தடுக்கக் கூடியவர்கள்; இன்னும், அல்லாஹ்வுடைய சட்டங்களைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள். (இத்தகைய தன்மைகளை உடைய) நம்பிக்கையாளர்களுக்கு (சொர்க்கத்தின்) நற்செய்தி கூறுவீராக! (அல்குர்ஆன் 9 : 112)

ஏன் நாம் ஈமானை பற்றி பேச வேண்டும்? அதை முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும். இன்று, நாமெல்லாம் நமக்கு நாமே ஒரு எடை போட்டு வைத்திருக்கிறோம். ஒரு சில அளவுகோலை வைத்துக்கொண்டு, அதுவும் நாமாக உருவாக்கிய ஒரு அளவுகோலை வைத்துக்கொண்டு நம்மை மூஃமின்கள் என்பதாக நமக்கு நாமே கூறிக்கொண்டு திருப்தி அடைந்து கொண்டிருக்கிறோம்.

நாம் முஃமின்கள் என்று நம்மை கூறுவதால் அல்லாஹ்விடத்திலும் நாம் முஃமின்களாக ஆகிவிட முடியுமா? அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்திலும் நாம் முஃமின்களாக ஆகிவிட முடியுமா? என்றால் எதுவரை முஃமின்களுக்கென்று அல்லாஹு தஆலா என்னென்ன அடையாளங்களை குர்ஆனிலே கூறியிருக்கிறானோ, என்னென்ன பண்புகளை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியிருக்கிறார்களோ அந்த அடையாளங்களை அந்த பண்புகளை நமக்குள் கொண்டு வராத வரை முஃமின்களாக ஆகவே முடியாது.

நாம் நமக்கு நாமாகவே சில விஷயங்களை கொண்டு திருப்தி அடைந்தாலும் சரி, அல்லாஹ் நம்மை கொண்டு திருப்தி அடைய மாட்டான். அல்லாஹ் ஒரு அடியானை கொண்டு திருப்தி அடைய வேண்டும் என்றால் அவன் நிறத்தை பார்க்க மாட்டான்; வெளி தோற்றத்தை பார்க்க மாட்டான்; அழகை பார்க்க மாட்டான்; செல்வத்தை பார்க்க மாட்டான்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்:

«إِنَّ اللهَ لَا يَنْظُرُ إِلَى صُوَرِكُمْ وَأَمْوَالِكُمْ، وَلَكِنْ يَنْظُرُ إِلَى قُلُوبِكُمْ وَأَعْمَالِكُمْ»

அல்லாஹு தஆலா உங்களுடைய தோற்றத்தை பார்க்க மாட்டான்.

ஒருவரை அழகிய தோற்றத்திலோ அழகற்ற தோற்றத்திலோ படைப்பது இது அல்லாஹ்வுடைய உரிமை; அல்லாஹ்வுடைய நாட்டம். நம்முடைய தோற்றத்தை தேர்ந்தெடுப்பதினுடைய உரிமை நம்மிடத்தில் இல்லை. அல்லாஹு தஆலா யாருக்கு என்ன தோற்றத்தை கொடுக்க வேண்டும் என்று அவனுடைய ஞானத்தின் அடிப்படையில் விதியில் முடிவு செய்தானோ அந்த தோற்றத்தை கொடுக்கிறான். அவன் உங்களது தோற்றத்தை பார்க்க மாட்டான்.

உங்களுடைய செல்வங்களை அல்லாஹ் பார்க்க மாட்டான். ஒருவர் ஏழையாக இருப்பதோ ஒருவர் செல்வந்தராக இருப்பதோ அல்லாஹ்வுடைய நாட்டம். அல்லாஹ் அவருக்கு விதியிலே விதித்தது.

ஆனால், அல்லாஹ் உங்களுடைய உள்ளங்களை பார்க்கிறான். சிலர் முகத்தை அழகு படுத்துவதிலே, உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதிலே முயற்சி செய்வார்கள். கடின பிரயாசை எடுப்பார்கள். அவர்களுடைய உள்ளமும் அசிங்கமாக நாறிக்கொண்டு இருக்கும். உள்ளம் கருப்படைந்து இருக்கும். பாவங்களால் கெட்ட எண்ணங்களால் உள்ளம் துர்நாற்றம் பிடித்திருக்கும்.

அவரோ தன்னுடைய உடலையும் ஆடையையும் சுத்தப்படுத்துவதில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பார். அவருடைய உள்ளத்தை விட்டு வானவர்கள் வெகு தூரத்திலே இருப்பார்கள். அல்லாஹ்வுடைய ரஹ்மத் வெகு தூரத்திலே இருக்கும்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்: அல்லாஹ் உங்களுடைய கல்பை பார்க்கிறான். உங்களுடைய அமல்களை அல்லாஹ் பார்க்கிறான்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2564.

மற்றும் ஒரு ஹதீஸிலே இமாம் முஸ்லிம் ரஹிமஹுல்லாஹ் பதிவு செய்கிறார்கள். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இறுதி ஹஜ்ஜிலே உபதேசம் செய்த போது தக்வாவை வலியுறுத்தி சொன்னார்கள்:

التَّقْوَى هَاهُنَا

தக்வா இங்கே (உள்ளத்தில்) இருக்க வேண்டும். (1)

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2564.

சிலர், தங்களுடைய ஆடையைக் கொண்டு, தங்களுடைய வெளிப்படையான சில காரியங்களைக் கொண்டு, தங்களை தக்வா உள்ளவர்களாக காட்டிக் கொள்வதில் முயற்சி செய்வார்கள்.

நீங்கள் அவர்களோடு சமூக உறவு வைத்தால் அல்லது பொருளாதார கொடுக்கல் வாங்கல் உறவு வைத்தால்தான் தெரியும். அவரிடத்தில் தக்வா இருந்ததா? அல்லது இறையச்சத்தின் தோற்றத்தைக் கொண்டு உங்களை ஏமாற்றினாரா? என்பது.

பலர் இப்படித்தான் ஆடைகளைக் கொண்டு, வெளித்தோற்றத்தைக் கொண்டு, பள்ளியில் நம்மோடு தொழுதாரே, நம்மோடு ஹஜ்ஜுக்கு வந்தாரே, நம்மோடு இபாதத் செய்தாரே என்று பலரிடத்திலே ஏமாந்து இருக்கிறார்கள்.

எதற்கு சொல்ல வருகிறோம் என்றால், குர்ஆனிலே ஏன் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? முஃமீன்கள் என்று அல்லாஹு தஆலா யாரை அடையாளப்படுத்துகிறான்? ஏன் ஹதீஸிலே நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முஃமின்களுக்கு சொல்லக்கூடிய அடையாளம் என்னவென்று, அவற்றைக் கற்று அவற்றைப் பற்றி சிந்தித்தால் தான் அந்த குணம் நம்மிடத்திலே இருக்கிறதா? இல்லையா? என்பதை நாம் தெரிய முடியும்.

அல்லாஹு தஆலா சொல்லக்கூடிய அந்த வசனத்தை சிந்தித்து பாருங்கள். எத்தனை பண்புகளை அல்லாஹ் சொல்கிறான்:

ஒன்பது பண்புகளை ஒரே வசனத்தில் அல்லாஹு தஆலா அடுக்கிக் கொண்டே போகிறான். (அல்குர்ஆன் 9 : 112)

மூஃமின்கள் யார்? நான் விரும்பக் கூடிய மூமின்கள் யார்? யாருக்காக ஜன்னத்துல் ஃபிர்தௌசை ஏற்படுத்தி வைத்திருக்கிறேனோ, யாருக்காக ஜன்னத்துல் நயீமை ஏற்படுத்தி வைத்திருக்கிறேனோ, யாருக்காக ஹூரை படைத்து வைத்திருக்கிறேனோ, யாரை வரவேற்பதற்காக மலக்குகள் எதிர்பார்த்துக் கொண்டு காத்துக் கொண்டு இருக்கிறார்களோ அந்த மூமின்கள் யார்?

اَلتَّائِبُوْنَ அவர்கள் பாவங்களில் இருந்து திருந்துவார்கள். எவ்வளவு அழகாக அல்லாஹ் சொல்லுகிறான் பாருங்கள். பாவங்கள் செய்ய மாட்டார்கள் என்று அல்லாஹ் சொல்லவில்லை. ரப்புக்கு தெரியும். ரப், நம்மை படைத்தவன்.

சில நேரங்களில் ஆசைகளால் உந்தப் பட்டு, ஆசைகளால் இழுக்கப்பட்டு, சைத்தானுடைய ஊசலாட்டத்தால் ஏதாவது சில பாவத்திலே மனிதர்கள் விழுந்து விடுகிறார்கள். ஒவ்வொருவரும் அவருடைய நஃப்ஸுடைய பலவீனத்திற்கு ஏற்ப சில பாவங்களிலே சிக்கிக் கொள்கிறார்கள். அல்லாஹு தஆலா அடியாரை அறிந்தவன். அவன் தனக்கு ரஹ்மான் ரஹீம் என்று பெயர் வைத்தவன். தனக்கு அவனே கரீம் என்று பெயர் சூட்டிக்கொண்டவன். தனக்கு அவன் غافر غفور என்று அவனையே அவன் புகழ்ந்து கொண்டவன்.

நீ மன்னிப்பு கேள், நான் மன்னிக்கிறேன் என்று சொல்கிறான். ஹதீஸ் குதுசியிலே அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ் கூறுவதாக அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ் நம்மை பார்த்து பேசுகிறான்:

يَا عِبَادِي إِنَّكُمْ تُخْطِئُونَ بِاللَّيْلِ وَالنَّهَارِ، وَأَنَا أَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا، فَاسْتَغْفِرُونِي أَغْفِرْ لَكُمْ

அடியானே, நீ இரவிலும் பாவம் செய்கிறாய்; பகலிலும் பாவம் செய்கிறாய். நானோ பாவங்களை மன்னித்துக் கொண்டே இருக்கிறேன்.

என்னிடத்திலே மன்னிப்பு கேள், நான் பாவங்களை மன்னிக்க தயாராக இருக்கிறேன். (2)

அறிவிப்பாளர் : அபூ தர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2577.
அல்லாஹ் ஏற்றுக்கொண்ட மூஃமின்களுடைய அடையாளம் சொல்கிறான்: التَّائِبُونَ அவர்கள் திருந்துவார்கள். தவ்பா கேட்பார்கள்.

التَّائِبُونَ என்று சொன்னால் தெரிந்து விட்டு பாவ மன்னிப்பு கேட்பது. ஒரு பாவ மன்னிப்பு எப்போதும் நாம் செய்து கொண்டே استغفار இருக்க வேண்டும்.

«إِنَّهُ لَيُغَانُ عَلَى قَلْبِي، وَإِنِّي لَأَسْتَغْفِرُ اللهَ، فِي الْيَوْمِ مِائَةَ مَرَّةٍ»

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு நாளைக்கு நூறு முறை استغفار செய்வார்கள். அதுபோக தொழுகையிலே, தொழுகைக்கு முன், தொழுகைக்குப் பின் அதுவேறு.

அஸ்தஃபிருல்லாஹ் -அல்லாஹ் உன்னிடத்திலே நான் மன்னிப்பு கேட்கிறேன் என்று தனியாக குறைந்தது நூறு முறையாவது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உச்சரிப்பு செய்வார்கள்.

அறிவிப்பாளர் : அகர் அல்முசன்னி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2702.

இது தனி. அதுபோக ஏதாவது ஒரு பெரும் பாவத்தில் நாம் சிக்கிக்கொண்டால் (அல்லாஹ் பாதுகாப்பானாக!) அந்த பெரும் பாவத்தை நினைத்து வருந்தி அல்லாஹ்விடத்தில் சொல்லி, யா அல்லாஹ்! நான் இன்று இந்த பெரும் பாவத்தில் விழுந்து விட்டேன்; நான் வருந்துகிறேன்; என்னை மன்னிப்பாயாக! என்று அல்லாஹ்விடத்திலே தவ்பா செய்து திருந்தி விலகுவது.

அதை செய்து கொண்டே அல்ல. அல்லாஹு தஆலா அதைத்தான் சொல்லுகிறான்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் விளக்கம் சொன்னார்கள்:

«التَّائِبُ مِنَ الذَّنْبِ، كَمَنْ لَا ذَنْبَ لَهُ»

ஒருவர் பாவத்திலிருந்து தவ்பா செய்து விட்டால் அந்தப் பாவத்தை அவர் செய்யாதவரை போன்று. (அந்தப் பாவம் அவருடைய ஏட்டில் அறவே இல்லாததை போன்று மாற்றி விடுகிறான்.)

அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா, எண் : 4250.

எவ்வளவு பெரிய அருள் பாருங்கள்! அல்லாஹ் மன்னிப்பது மட்டுமல்ல, அரபியிலே غفر என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு வார்த்தையின் ஆழத்தை பாருங்கள். அல்லாஹு தஆலா

பாவத்தை மறைத்து விடுகிறான். உங்களுடைய பாவத்தை பிறர் பார்க்காமல் பிறருக்குத் தெரியாமல் உங்களை அல்லாஹ்ஹு தஆலா மறைத்துக் கொள்கிறான்.

சஹாபாக்கள், தாபியீன்கள் சொல்வார்கள்: என்னை விட்டும் திரை அகற்றப்பட்டால் எனக்கு பின்னால் நீங்கள் வர மாட்டீர்கள் என்று.

எவ்வளவு பெரிய சஹாபாக்கள் தாபியீன்கள் அப்படி சொன்னார்கள் என்றால் நம்முடைய நிலை எல்லாம் என்னவாகும்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

நம்முடைய உள்ளத்தில் நாம் நினைக்கக் கூடிய எண்ணங்களை அல்லாஹ்ஹு தஆலா மறைத்திருக்கிறானே! அந்த எண்ணங்கள் வெளிப்படுத்தப்பட்டால் நம்முடைய நிலை என்னவாகும்? நம்முடைய செயல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டால் நம்முடைய நிலை என்னவாகும்?

அல்லாஹ்ஹு தஆலா எவ்வளவு பெரிய அருளால் பாவங்களை மறைத்து விடுகிறான். பிறகு, நாம் தவ்பா செய்து விட்டால் நம்முடைய ஏட்டில் இருந்து அல்லாஹ்ஹு தஆலா முற்றிலுமாக அழித்து விடுகிறான்.

தவ்பா அல்லாஹ்விற்கு மிகப் பிரியமான ஒன்று. அல்லாஹ்வை நீங்கள் திருப்தி படுத்த நினைத்தால், அல்லாஹ்வை நீங்கள் அதிகம் மகிழ்ச்சி படுத்த நினைத்தால், அதற்கு அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹ்ஹு அலைஹி வஸல்லம் சொல்லக்கூடிய ஒரே வழி, தவ்பா கேளுங்கள்; அல்லாஹ் சொல்லக்கூடிய ஒரே, வழி தவ்பா கேளுங்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَتُوْبُوْۤا اِلَى اللّٰهِ جَمِيْعًا

இன்னும், நம்பிக்கையாளர்களே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி திரும்பி விடுங்கள். (அல்குர்ஆன் 24 : 31)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا تُوبُوا إِلَى اللَّهِ تَوْبَةً نَصُوحًا

நம்பிக்கையாளர்களே! உண்மையாக பாவமன்னிப்புக் கேட்டு (திருந்தி) அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்! (அல்குர்ஆன் 66 : 8)

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹ்ஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்:

لَلَّهُ أَفْرَحُ بِتَوْبَةِ عَبْدِهِ مِنْ أَحَدِكُمْ يَجِدُ ضَالَّتَهُ بِالْفَلَاةِ

அல்லாஹ்ஹு தஆலா தன்னுடைய அடியானுடைய தவ்பாவை கொண்டு மிக மகிழ்ச்சி அடைகிறான்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2675.

அல்லாஹ்விற்கு மிக பிரியமான ஒன்று, நம்மிலே யார் பாவம் செய்கிறாரோ அவர் அந்தப் பாவத்தை நினைத்து அல்லாஹ்விடத்தில் வருந்தி, மன்னிப்பு கேட்கும்போது அல்லாஹு தஆலா நம்மை மன்னிப்பது மட்டுமல்ல, நம் மீது மிகப்பெரிய ஒரு சந்தோஷத்தை அவன் போடுகிறான்.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது போன்று, அல்லாஹு தஆலா தனக்கு விருப்பமான அந்த நம்பிக்கையாளர்களை சொல்லும் பொழுது இந்த வசனத்திலே முதலாவதாக தவ்பா கேட்பவர்களை சொல்லுகிறான்.

இன்று நம்முடைய நேரங்களில் ஒரு பெரிய அளவு நேரத்தை இந்த பாவங்கள் தானே சூழ்ந்து கொண்டிருக்கின்றன. பாவங்கள் தானே ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கின்றன.

பாவங்களை விட்டு வந்ததற்குப் பிறகு என்ன செய்வது? அப்படியே கல்லாக உட்கார்ந்து இருப்பதா? தூங்கிக் கொண்டே இருப்பதா? என்ன செய்வது?

பாவத்தை பார்ப்பதிலே நேரத்தை கழித்தான்; பாவத்தை கேட்பதிலே நேரத்தை கழித்தான்; பாவத்தை நோக்கி ஓடுவதிலே நேரத்தை கழித்தான்; தன்னுடைய உடல் ஆரோக்கியத்தை கழித்தான்; தன்னுடைய செல்வத்தை கழித்தான். இப்போது என்ன செய்வது?

அல்லாஹ் சொல்லுகிறான்: அடியானே العابدون வணக்கசாலியாக ஆகிவிடு. இபாதத்திற்கு வந்துவிடு. என்னை வணங்க நேரம் கொடு.

அல்லாஹு தஆலா நம்மை எதற்காக படைத்தான்?

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

அவனை வணங்குவதற்கு தான் நம்மை படைத்திருக்கிறான். (அல்குர்ஆன் 51 : 56)

வியாபாரம், தொழில்துறை எல்லாம் நம்முடைய தேவைகளுக்காக நமக்கு அனுமதிக்கப்பட்டது. நாம் என்ன விளங்கி வைத்திருக்கிறோம்? வியாபாரம் தொழில்துறை குடும்பம் இதெல்லாம் நமக்கு முதலாவதாக இருக்கிறது. இதிலிருந்து மிஞ்சினால் இபாதத்தை பார்ப்போம். இதிலிருந்து ஒரு அற்ப சதவீதத்தை இபாதத்திற்காக ஒதுக்குவோம் என்று இருக்கிறோம்.

நபிமார்களை அல்லாஹு தஆலா உம்மத்திற்கு அனுப்பிய நோக்கமே என்ன? அவர்கள் மக்களுக்கு என்ன சொன்னார்கள்:

மக்களே, அல்லாஹ்வை இபாதத் செய்யுங்கள்! (அல்குர்ஆன் 7 : 59, 11 : 50,6, 23 : 23)

இந்த இபாதத் அடியானுக்கு அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப விடப்பட்டிருக்குமேயானால் அடியான் அல்லாஹ்வை வணங்குவதிலே ஈடுபட்டிருக்க

மாட்டான் என்பதற்காகதான் அதுவும் ஒரு அடிப்படை நோக்கம் அதற்காகத்தான் அல்லாஹுத தஆலா சில இபாதத்துகளை நம் மீது கட்டாயம் ஆக்கிவிட்டான்.

தொழுகையில் ஒரு குறிப்பிட்ட அளவை கட்டாயம் ஆக்கிவிட்டான். நோன்பிலே ஒரு குறிப்பிட்ட அளவை கட்டாயம் ஆக்கிவிட்டான். தர்மத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை அல்லாஹுத தஆலா கட்டாயம் ஆக்கிவிட்டான். உறவுகளை சேர்த்து வாழ்வதிலே ஒரு குறிப்பிட்ட அளவை அல்லாஹுத தஆலா நம் மீது கட்டாயம் ஆக்கி விட்டான்.

இப்படியாக ஒவ்வொரு இபாதத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவை நம் மீது அல்லாஹ் ஃபர்ழாக ஆக்கிவிட்டான். குறைந்தபட்சம் இதையாவது நீ திருத்தமாக செய்து கொள் என்பதாக.

அடியான் தவ்பாவிலிருந்து மீண்டதற்கு பிறகு அல்லாஹ்வுடைய இபாதத்தை நோக்கி வர வேண்டும்.

فَفِرُّوْۤا اِلَى اللّٰهِ

அல்லாஹ்வை நோக்கி ஓடிக் கொண்டே இருங்கள். (அல்குர்ஆன் 51: 50)

எதுவரை? அல்லாஹ்வை சந்திக்கிற வரை அடியான் அல்லாஹ்வை நோக்கி ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வை நோக்கி ஓடுவது என்ன? அல்லாஹ்வுடைய இபாதத்திலே அடியான் திளைத்திருப்பது; ஒரு இபாதத்திற்கு பிறகு இன்னொரு இபாதத்தை நோக்கி சென்று கொண்டே இருப்பது; காலைக்குரிய இபாதத், மாலைக்குரிய இபாதத், பகலுக்குரிய இபாதத், செல்வத்திற்குரிய இபாதத் இப்படியாக வணக்க வழிபாடுகளை தேடிக்கொண்டே இருப்பது; அதிலே ஈடுபட்டுக் கொண்டே இருப்பது; குர்ஆன் ஓதுவது; பிறகு, திக்ரு செய்வது; பிறகு தர்மம் செய்வது; பிறகு நம்மை சுற்றி உள்ளவர்களுக்கு உதவுவது; தாய் தந்தையருக்கு பணிவிடை செய்வது; பிறகு, மஸ்ஜிதுக்கு தொழுகைக்கு வருவது; கல்வி படிப்பது; பிறகு, தொழிலுக்கு செல்வது; அங்கே நேர்மையாக நடப்பது; பிறகு, நம்முடைய உறவுகளை சந்திப்பது; பிறகு, வணக்க வழிபாடு.

இப்படியாக العابدون அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாக நாம் இருப்பது. மூஃமின்களிலே முஸ்லிம்களிலே இரண்டு வகையானவர்கள் இருக்கிறார்கள். ஒரு கூட்டம் யார்? இபாதத்தை அடிப்படையாக வைத்து தங்களுடைய உலக தேவைகளை அமைத்துக் கொள்பவர்கள். இவர்களை அல்லாஹுத்தஆலா எப்படி சொல்கிறான்:

رِجَالٌ لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللَّهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ يَخَافُونَ يَوْمًا تَتَقَلَّبُ فِيهِ الْقُلُوبُ وَالْأَبْصَارُ

(இறை இல்லங்களில் தொழுகின்ற) ஆண்கள் - வர்த்தகமோ விற்பனையோ அல்லாஹ்வின் நினைவை விட்டும் தொழுகையை நிலை நிறுத்துவதை விட்டும் ஸகாத் கொடுப்பதை விட்டும் (இன்னும் வணக்க வழிபாடுகளை அல்லாஹ்விற்கு மட்டும் தூய்மையாக செய்வதை விட்டும்) அவர்களை திசை திருப்பி விடாது. அவர்கள் ஒரு நாளை

பயப்படுவார்கள். அதில் (-அந்நாளில்) உள்ளங்களும் பார்வைகளும் தடுமாறும். (அல்குர்ஆன் 24 : 37)

இவர்கள் கொடுக்கல் வாங்கலால், வர்த்தகத்தால், வியாபாரத்தால், தொழில்துறையால் அல்லாஹ்வை மறக்காதவர்கள். தங்களுடைய அனைத்து உறவுகளையும் திருமண உறவாக இருக்கட்டும், பிள்ளைகளாக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் சரி, அல்லாஹ்வை மறக்கக்கூடிய அனைத்திற்கும் தலாக் சொல்லி விடுவார்கள்.

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُلْهِكُمْ أَمْوَالُكُمْ وَلَا أَوْلَادُكُمْ عَنْ ذِكْرِ اللَّهِ وَمَنْ يَفْعَلْ ذَلِكَ فَأُولَئِكَ هُمُ الْخَاسِرُونَ

நம்பிக்கையாளர்களே! உங்கள் செல்வங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும் திருப்பி (உலகக் காரியங்களில் ஈடுபடுத்தி) விடவேண்டாம். ஆக, அத்தகையவர்கள்தான் நஷ்டவாளிகள். (அல்குர்ஆன் 63 : 9)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

وَاعْلَمُوا أَنَّمَا أَمْوَالُكُمْ وَأَوْلَادُكُمْ فِتْنَةٌ وَأَنَّ اللَّهَ عِنْدَهُ أَجْرٌ عَظِيمٌ

இன்னும், "உங்கள் செல்வங்கள், உங்கள் சந்ததிகள் எல்லாம் ஒரு சோதனையாகும்; நிச்சயமாக அல்லாஹ், - அவனிடம்தான் மகத்தான கூலி உண்டு" என்பதை அறிந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 8 : 28)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّ مِنْ أَزْوَاجِكُمْ وَأَوْلَادِكُمْ عَدُوًّا لَكُمْ فَاحْذَرُوهُمْ

நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக, உங்கள் மனைவிகளிலும் உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு எதிரிகள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் நீங்கள் கவனமாக (உஷாராக, எச்சரிக்கையாக) இருங்கள். இன்னும், நீங்கள் பிழை பொறுத்தால், (அவர்களின் தவறுகளை) புறக்கணித்தால், (அவர்களை) மன்னித்தால் (அது மிகச் சிறந்தது. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன் ஆவான். (அல்குர்ஆன் 64 : 14)

யார் யாரின் காரணமாக அல்லாஹ்வின் சட்டத்தை நீங்கள் மீறுகிறீர்களோ அல்லாஹ்வின் மார்க்கத்தை மீறுகிறீர்களோ அவர்கள் எல்லோரும் நமக்கு எதிரி; அல்லாஹ்வின் எதிரி.

நாங்க என்ன செய்யங்க? நான் என் திருமணத்தை, என் புள்ளைங்க திருமணத்தை லேசா செய்யணும்தான் ஆசை, என் மனைவி ஒத்துக்கல, பெரும்பாலானவர்கள் அல்லாஹ்வுடைய மார்க்கத்தை மீறும்போது சொல்லக்கூடிய குற்றச்சாட்டு இதுல. இது உண்மையா பொய்யா என்பதை உள்ள போய் கேட்டா தான் தெரியும்.

யார் நம்மை அல்லாஹ்வுடைய மார்க்கத்தை மீறுவதற்கு தூண்டுகிறார்களோ யாராக இருக்கட்டும், அல்லாஹ் சொல்லுகிறான்; அவர்கள் எதிரிகள்.

உங்களுடைய மனைவிகளில் உங்களது பிள்ளைகளை எதிரிகள் கண்டிப்பாக இருக்கிறார்கள், எச்சரிக்கையாக இருங்கள். (அல்குர்ஆன் 64 : 14)

அல்லாஹ்வுடைய சட்டத்தை மீறத் தூண்டக்கூடிய யாராக இருந்தாலும் சரி, அவர் அல்லாஹ்வுக்கும் எதிரி; அல்லாஹ்வுக்கு எதிரி; எனக்கு எதிரி. அவர் விஷயத்தில் நான் உஷாராக இருக்க வேண்டும்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்:

لَا طَاعَةَ لِمَخْلُوقٍ فِي مَعْصِيَةِ الْخَالِقِ

படைத்தவனுக்கு மாறு செய்கிற விஷயத்தில் படைப்பினங்கள் யாருக்கும் கீழ்படிய முடியாது கூடாது.

அறிவிப்பாளர் : இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அல்முஃஜமுல் கபீர் தப்ரானி, எண் : 381.

அல்லாஹு தஆலா العابدون என்று சொல்கிறான். என்னுடைய அடியார்கள்; நான் விரும்பக்கூடிய அடியார்கள்; இபாதத்தை அடிப்படையாக வைத்து வாழ்வார்கள்.

அவர்கள் எப்படி இருப்பார்கள்? الحامدون எல்லா நிலைகளிலும் என்னை புகழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

லாபமா? அல்ஹம்துலில்லாஹ். நஷ்டமா? அல்ஹம்துலில்லாஹ். குழந்தை பிறப்பா? அல்ஹம்துலில்லாஹ். மௌத்தா? அல்ஹம்துலில்லாஹ். இன்னா லில்லாஹி மட்டுமல்ல, இன்னாலில்லாஹி கண்டிப்பாக ஓத வேண்டும்.

உஸ்தாத் ஒரு முறை இறந்து விட்டார்கள். ஷேக் அல்பானி அவர்கள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது பொதுவாகவே அல்லாஹ்வை புகழுங்கள்; புகழுங்கள்; எல்லா நேரத்திலும் அல்லாஹ்வை புகழுங்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

ஒருமுறை அவருடைய ஷேக் அல்பானி உடைய இரண்டு பிள்ளைகள் வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது பிரிட்ஜில் இருந்து வாகனம் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டது. ஷேக் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாமாக இருந்தால் என்ன செஞ்சிருப்போம்? ஓடிப் போயிருப்போம்.

இப்போது ஷேக் அந்த செய்தியை கேட்டுவிட்டு ஒரு பக்கம் இன்னாலில்லாஹி சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கம் அல்ஹம்துலில்லாஹ் சொல்லுகிறார்கள். மாணவர்களுக்கு புரியவில்லை. என்ன உஸ்தாத்? அல்ஹம்துலில்லாஹ் சொல்லுகிறீர்களே?

சொன்னார்கள்: எனக்கு நாலு பிள்ளைகள். அந்த வாகனத்தில் இரண்டு பிள்ளைகள் தான் இருந்தார்கள். அல்லாஹு தஆலா இரண்டு பிள்ளைகளை பாதுகாத்தானே! அந்த ரெண்டு

பிள்ளைகளும் கீழே விழுந்து வாகனத்திற்குதான் சேதம். பிள்ளைகளை அல்லாஹுா தஆலா காப்பாற்றிக் கொடுத்தானே! அல்ஹம்துலில்லாஹ்!

ஒரு மாணவர் குறுக்கே கேட்டார்: சரி, அந்த ரெண்டு உங்களுடைய பிள்ளைகளும் மவுத்தா போயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அப்போதும் அல்ஹம்துலில்லாஹ் சொல்லுவீர்களா? ஆம், அல்ஹம்துலில்லாஹ் சொல்லுவேன். காரணம், எனக்கு என்னுடைய நாலு பிள்ளைகளையும் அல்லாஹுா தஆலா அந்த ஒரு வாகனத்திலே வைக்காமல் இரண்டு பிள்ளைகளை காப்பாற்றிக் கொடுத்தானே! அதற்காக அல்ஹம்துலில்லாஹ்!

நினைத்துப் பாருங்கள்! நம்முடைய ஒவ்வொரு சோதனையிலும் இன்னொரு பக்கம் இருக்கும். நாம் அதை சிந்தித்துப் பார்த்தால், கண்டிப்பாக அல்லாஹ் சுப்ஹானஹுா தஆலா நமக்கு ஒரு நன்மையை அங்கே நமக்கு ஒரு பரக்கத்தை, ஒரு நிஃமத்தை, ஒரு விசாலத்தை வைத்திருப்பான்.

அதை நினைத்து நாம் அல்லாஹ்வை புகழ்ந்தே ஆக வேண்டும். நமக்கு அல்லாஹ் கொடுத்த சோதனையையும் அல்லாஹுா தஆலா வீணாக்கி விட மாட்டான். அதன் மூலமாக நம்முடைய பாவங்களை மன்னிப்பான். நம்முடைய தரஜாவை அல்லாஹ் உயர்த்துவான்.

ஆகவே, ஒரு முஃமின் எப்போதும் எப்படி இருக்க வேண்டும்? الْحٰمِدُوْنَ -அல்லாஹ்வை புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

السَّآئِحُونَ -நஃபிலான நோன்புகள் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஃபர்லான நோன்புகள் மட்டும் அல்ல, இன்னும் சில அறிஞர்கள் சொல்லுகிறார்கள்: மார்க்க கல்வியை தேடிக்கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வின் பாதையிலே போருக்காக சென்று கொண்டே இருக்க வேண்டும்.

الرّٰكِعُوْنَ -தொழுகையை அல்லாஹுா தஆலா சொல்லிக் காட்டுகிறான். அவர்கள் தொழுகையிலே ருகூவு சுஜூதிலே இருப்பார்கள். ஏன் அல்லாஹுாத்தஆலா ருகூவு சுஜூதை சொல்லிக்காட்டுகிறான்?

பலர், ருகூவு சுஜூதிலே தான் விளையாடுவார்கள். இன்று பார்க்கிறோம்; தொழுகை எப்படி ஆகிவிட்டது என்று. கண் சிமிட்டும் நேரத்திலே ருகூவு முடிந்து விடுகிறது. சுஜூத் முடிந்து விடுகிறது. நிலையில் கூட நீண்ட நேரம் நிற்பவர்கள், ருகூவுக்கு வந்துவிட்டால் ஓடி விடுகிறார்கள். சுஜூதுக்கு சென்று விட்டால், ஓடி விடுகிறார்கள்.

சஹாபாக்களை அல்லாஹ் புகழக்கூடிய இடங்களை பாருங்கள்:

تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا

நபியே! அவர்களை ருகூவு செய்த நிலையிலே சுஜூது செய்த நிலையிலே அவர்களை நீங்கள் பார்ப்பீர்கள் என்று. (அல்குர்ஆன் 48 : 29)

ஆகவே, ரசூலுல்லாஹ் உடைய இபாதத்தை பார்க்கிறோம்; நிலையில் எவ்வளவு நேரம் நின்றார்களோ அதே அளவு ருகூவிலே இருப்பார்கள். அதே அளவு சுஜூதிலே இருப்பார்கள்.

நம்முடைய முதுகு குனிந்து குனிந்து வலி ஏற்பட வேண்டும். சுஜூதிலே இருந்து இருந்து நமது நெற்றியிலே முகத்திலே அந்த வலியை உணர வேண்டும். அத்தகைய ருகூவு சுஜூத் அல்லாஹ்வுக்கு விருப்பமான இபாதத்.

பிறகு, அல்லாஹ் சொல்லுகிறான்:

الآمِرُوْنَ بِالمَعْرُوْفِ -அவர்கள் சமூக அக்கறை உடையவர்கள். நன்மையை மக்களுக்கு ஏவி கொண்டே இருப்பார்கள். பிறருக்கு நன்மையை சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

وَالنَّاهُوْنَ عَنِ المُنْكَرِ -தீமையில் இருந்து மக்களை தடுத்துக் கொண்டே இருப்பார்கள்.

இன்று, மக்கள் எப்படி என்றால் ஒவ்வொருவரும் தான் பெயர் கெட்டு விடக்கூடாது, நான் எந்த வம்புக்கும் போகக்கூடாது, நான் எந்த பிரச்சனையும் விலைக்கு வாங்க கூடாது, கண்டிப்பா அப்படித்தான் எல்லாருமே இருக்கணும், ஆனா அதுக்கு என்ன அர்த்தம்? யாரு எக்கேடு கெட்டு போனா என்ன, யாரு எதை செய்தால் என்ன, செய்யவில்லை என்றால் என்ன, எனக்கு அதை பற்றி எந்த கவலையும் இல்லை.

இதுவா அல்லாஹ்வுடைய மார்க்கம் நமக்கு சொல்லிக் கொடுத்தது? இதுவா பிரச்சனை இல்லாத ஒரு நிலைப்பாடு? இதுவா ஒரு சமூகமான நிலைப்பாடு? நன்மையை ஏவுவது பிரச்சனை என்றால், அதற்கு அவர்கள் சொல்லக்கூடிய தவறான அர்த்தம், அது நன்மையை ஏவுவது கட்டாய கடமை. இந்த உம்மத் உடைய முதுகெலும்பு.

கணவன் மனைவிக்கு ஏவ வேண்டும்; மனைவி கணவனுக்கு, பெற்றோர் பிள்ளைகளுக்கு, பிள்ளை பெற்றோருக்கு, சமூகத்தில் இருக்கக் கூடிய ஒவ்வொருவரும் நன்மையை ஏவி கொண்டே இருக்க வேண்டும். நன்மையை ஏவவில்லை என்றால், ஒரு காலத்தில் தீமை நன்மையாக ஆகிவிடும். தீமை ஏவப்படும். இன்று மாறி இருப்பதைப் போன்று.

அடுத்து, அல்லாஹு தஆலா முடிக்கிறான்:

وَالحَافِظُونَ لِحُدُودِ اللهِّ -அவர்கள் மொத்த சமுதாயமாக சேர்ந்து அல்லாஹ்வின் சட்ட வரம்புகளை பாதுகாப்பார்கள். அல்லாஹ்வின் மார்க்க ஒழுக்கங்களை அவர்கள் பேணுவார்கள்.

நபியே, இத்தகைய மூமின்களுக்கு நீங்கள் சொர்க்கத்தின் நற்செய்தியை சொல்லுங்கள்; எனது பொருத்தத்தின் எனது மன்னிப்பின் நற்செய்தியை சொல்லுங்கள்! (அல்குர்ஆன் 9 : 112)

அன்பிற்குரியவர்களே! அல்லாஹு தஆலா உடைய வேதத்தை சிந்திப்போமாக! அல்லாஹு தஆலா மூமின்களுக்கு சொல்லக்கூடிய அந்த அடையாளங்களை நம்முடைய வாழ்க்கையிலே கொண்டு வருவோமாக!

**ஆமீன்**

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்புகள் :**

குறிப்பு 1)

حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ مَسْلَمَةَ بْنِ قَعْنَبٍ، حَدَّثَنَا دَاوُدُ يَعْنِي ابْنَ قَيْسٍ، عَنْ أَبِي سَعِيدٍ، مَوْلَى عَامِرِ بْنِ كُرَيْزٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «لَا تَحَاسَدُوا، وَلَا تَنَاجَشُوا، وَلَا تَبَاغَضُوا، وَلَا تَدَابَرُوا، وَلَا يَبِعْ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ، وَكُونُوا عِبَادَ اللهِ إِخْوَانًا الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ، لَا يَظْلِمُهُ وَلَا يَخْذُلُهُ، وَلَا يَحْقِرُهُ التَّقْوَى هَاهُنَا» وَيُشِيرُ إِلَى صَدْرِهِ ثَلَاثَ مَرَّاتٍ «بِحَسْبِ امْرِئٍ مِنَ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ، كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ حَرَامٌ، دَمُهُ، وَمَالُهُ، وَعِرْضُهُ» (صحيح مسلم – 2564)

குறிப்பு 2)

حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ عَبْدِ الرَّحْمَنِ بْنِ بَهْرَامَ الدَّارِمِيُّ، حَدَّثَنَا مَرْوَانُ يَعْنِي ابْنَ مُحَمَّدٍ الدِّمَشْقِيَّ، حَدَّثَنَا سَعِيدُ بْنُ عَبْدِ الْعَزِيزِ، عَنْ رَبِيعَةَ بْنِ يَزِيدَ، عَنْ أَبِي إِدْرِيسَ الْخَوْلَانِيِّ، عَنْ أَبِي ذَرٍّ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فِيمَا رَوَى عَنِ اللهِ تَبَارَكَ وَتَعَالَى أَنَّهُ قَالَ: «يَا عِبَادِي إِنِّي حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِي، وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا، فَلَا تَظَالَمُوا، يَا عِبَادِي كُلُّكُمْ ضَالٌّ إِلَّا مَنْ هَدَيْتُهُ، فَاسْتَهْدُونِي أَهْدِكُمْ، يَا عِبَادِي كُلُّكُمْ جَائِعٌ، إِلَّا مَنْ أَطْعَمْتُهُ، فَاسْتَطْعِمُونِي أُطْعِمْكُمْ، يَا عِبَادِي كُلُّكُمْ عَارٍ، إِلَّا مَنْ كَسَوْتُهُ، فَاسْتَكْسُونِي أَكْسُكُمْ، يَا عِبَادِي إِنَّكُمْ تُخْطِئُونَ بِاللَّيْلِ وَالنَّهَارِ، وَأَنَا أَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا، فَاسْتَغْفِرُونِي أَغْفِرْ لَكُمْ، يَا عِبَادِي إِنَّكُمْ لَنْ تَبْلُغُوا ضَرِّي فَتَضُرُّونِي وَلَنْ تَبْلُغُوا نَفْعِي، فَتَنْفَعُونِي، يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَتْقَى قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ، مَا زَادَ ذَلِكَ فِي مُلْكِي شَيْئًا، يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَفْجَرِ قَلْبِ رَجُلٍ وَاحِدٍ، مَا نَقَصَ ذَلِكَ مِنْ مُلْكِي شَيْئًا، يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ قَامُوا فِي صَعِيدٍ وَاحِدٍ فَسَأَلُونِي فَأَعْطَيْتُ كُلَّ إِنْسَانٍ مَسْأَلَتَهُ، مَا نَقَصَ ذَلِكَ مِمَّا عِنْدِي إِلَّا كَمَا يَنْقُصُ الْمِخْيَطُ إِذَا أُدْخِلَ الْبَحْرَ، يَا عِبَادِي إِنَّمَا هِيَ أَعْمَالُكُمْ أُحْصِيهَا لَكُمْ، ثُمَّ أُوَفِّيكُمْ إِيَّاهَا، فَمَنْ وَجَدَ خَيْرًا، فَلْيَحْمَدِ اللهَ وَمَنْ وَجَدَ غَيْرَ ذَلِكَ، فَلَا يَلُومَنَّ إِلَّا نَفْسَهُ» قَالَ سَعِيدٌ: كَانَ أَبُو إِدْرِيسَ الْخَوْلَانِيُّ، إِذَا حَدَّثَ بِهَذَا الْحَدِيثِ، جَثَا عَلَى رُكْبَتَيْهِ. (صحيح مسلم – 2577)

muftiomar@gmail.com, 044 2524 7866, 9840174121, 9884469044

Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi/

Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber

Website: http://www.darulhuda.net/